


# மறுசீரமைப்பு கட்டமைப்புடன் தொழில் ஒப்பந்தங்களுக்கு மறுபேச்சுவார்த்தை செய்தல்

# தகுதிபெறும் தொழில் நிறுவனங்கள் தகுதிபெறும் ஒப்பந்தங்கள்

## மறுசீரமைப்பு கட்டமைப்பு (Re-Align Framework) என்பது என்ன?

கொவிட்-19 நிலவரத்தால் குறிப்பிடத்தக்க பாதிப்புக்கு உள்ளான சிறிய, மற்றும் மிகச் சிறிய தொழில் நிறுவனங்கள், தங்களது ஒப்பந்தப் பங்காளிகளுடன் செய்திருக்கும் குறிப்பிட்ட சிலவகை ஒப்பந்தங்களுக்கு மறுபேச்சுவார்த்தை நடத்த விரும்பினால், மறுசீரமைப்பு கட்டமைப்பின்கீழ் 15 ஜனவரி முதல் 26 பிப்ரவரி 2021 வரை அவ்வாறு செய்யலாம்.

**தொழில் நிறுவனங்கள் தற்போதைய பொருளியல் நிலவரத்திற்கும் தொழில் இலக்குகளுக்கும்** ஏற்ப தங்களின் **ஒப்பந்தங்களைச் சீரமைப்பதற்கு** இக்கட்டமைப்பு வழிவகுக்கும். சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் தங்களது ஒப்பந்தங்களின் தொடர்பில் மறுபேச்சுவார்த்தை நடத்தி பரஸ்பர உடன்பாடுக்கு வருமாறு பெரிதும் ஊக்குவிக்கப்படுகின்றனர். அவர்களால் உடன்பாடு காண முடியாவிட்டால், ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். எஞ்சியுள்ள கடன்களுக்கும் பொறுப்புகளுக்கும் தொழில் நிறுவனங்கள் தொடர்ந்து பொறுப்பேற்கவேண்டும், ஆனால் முன்கூட்டியே ரத்து செய்வதற்கான அபராதத்தை அவர்கள் செலுத்த வேண்டியதில்லை.



## யாரெல்லாம் தகுதி பெறுவார்கள்?

பின்வரும் சூழ்நிலைகளில் தொழில் நிறுவனம் இக்கட்டமைப்புக்கு தகுதிபெறும்:

- உலகளாவிய குழும அடிப்படையில் நிதி ஆண்டு 2019-ல் S$30 மில்லியனுக்கு மேற்போகாத வருடாந்தர வருமானம்; மற்றும்
- ஜூலை முதல் டிசம்பர் 2019 வரை ஒப்பிடுகையில், ஜூலை முதல் டிசம்பர் 2020 வரை மாதாந்தர மொத்த சராசரி வருமானம் குறைந்தது 70% சரிவை கண்டிருக்கிறது[1]

*[1]ஒரு தொழில் நிறுவனம் ஜூலை முதல் டிசம்பர் 2019 வரையிலான காலகட்டத்தில் அல்லது ஜூலை 2020 மாதத்திற்குள் செயல்படத் தொடங்காதிருந்தால், மாற்றுக் காலகட்டங்கள் பயன்படுத்தப்படும். ஆயினும், மறுசீரமைப்பு கட்டமைப்புக்குத் தகுதிபெற, அந்நிறுவனம் 1 செப்டம்பர் 2020 தேதிக்குள் செயல்படத் தொடங்கியிருக்கவேண்டும் (அதாவது, வருமானம் ஈட்டக்கூடிய நிலையில் இருந்திருக்கவேண்டும்).*

## எத்தகைய ஒப்பந்தங்கள் இதில் உள்ளடங்கும்?

ஓர் ஒப்பந்தம் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றினால், மறுசீரமைப்பு கட்டமைப்பு அதற்குப் பொருந்தும்:

- சிங்கப்பூர் சட்டத்திற்கு உட்பட்டது
- குறைந்தது ஒரு தரப்பினருக்கு சிங்கப்பூரில் தொழிலிடம் இருக்கிறது
- 25 மார்ச் 2020 தேதிக்கு முன்பாகச் செய்யப்பட்டது
- பின்வரும் பிரிவுகளுள் ஒன்றின்கீழ் இடம்பெறுகிறது:
  - குடியிருப்பு அல்லாத அசையா சொத்துக்கான குத்தகை அல்லது உரிமம்
  - வர்த்தகச் சாதனம் அல்லது வர்த்தக வாகனத்திற்கான தவணைக் கொள்முதல் அல்லது நிபந்தனைக்குட்பட்ட விற்பனை ஒப்பந்தம் (சிங்கப்பூர் நாணய ஆணையத்தால் கட்டுப்படுத்தப்படும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான ஒப்பந்தங்கள் இதில் அடங்காது)
  - வர்த்தக சாதனம் அல்லது வர்த்தக வாகனத்திற்கான வாடகை ஒப்பந்தம்
  - பொருள் அல்லது சேவைகளின் விற்பனை, கொள்முதலுக்கான ஒப்பந்தம்
- விலக்கப்பட்ட ஒப்பந்தம் அல்ல, எ.கா. பயனீட்டாளர் ஒப்பந்தம், வேலை நியமன ஒப்பந்தம், காப்புறுதி ஒப்பந்தம் போன்றவை.

விலக்கப்பட்ட ஒப்பந்தங்களின் முழுப் பட்டியலுக்கு www.go.gov.sg/re-align-contracts என்ற இணையப்பக்கத்தை நாடுங்கள்




MINISTRY OF LAW
SINGAPORE

**மேல் விவரம் அறிய, www.go.gov.sg/re-align என்ற இணையப்பக்கத்தை நாடுங்கள்**

2020-COVID-INFO1